**பொ.து.ந.க.எண்.இ9/26838/2021**

**தீர்மானஎண்.764/2021** **நாள்:01-10-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.எம்.சுப்பைய்யா, தூய்மைப்பணியாளர், பணி எண்.688020, மண்டலம்-8 , பகுதி-21, கோட்டம்-96 அவர்கள் 02.10.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8, பகுதி-21, கோட்டம்-96ல், தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.எம்.சுப்பைய்யா, பணியாளர் எண்.688020 என்பவர் தன்னுடைய உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும் மற்றும் தன் குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தன்னால் தொடர்ந்து பணிக்கு வர முடியவில்லை என்றும், தன்னை தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் 05.07.2021 நாளிட்ட மனு சமர்ப்பித்துள்ளார்.

காவல்துறை துணை கண்காணிப்பாளர் / விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 19.07.2021 நாளிட்ட கடிதத்தில், இன்றைய தேதியில் தனியர் மீது விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி சிந்தாதிரிப்பேட்டை தொழிலாளர் கூட்டுறவு சங்கம் அவர்களின் 15.07.2021 நாளிட்ட கடிதத்தில், தனியருக்கு கூட்டுறவு சங்க கடன் நிலுவைத் தொகை ரூ.3,20,000/- (ரூபாய் மூன்று லட்சத்து இருபதாயிரம் மட்டும்) உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர், மண்டல அலுவலர், மண்டலம் - 8 அவர்களின் 23.09.2021 நாளிட்ட குறிப்பில், திரு.எம்.சுப்பைய்யா, தூய்மைப் பணியாளர், பகுதி-21, கோட்டம்-96 என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சியில் 12.04.1989 அன்று நிரந்தர தூய்மைப் பணியாளராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணியாற்றி வரும் தனியருக்கு அப்பதவியில் 12.04.1989 அன்று பணிவரன்முறை மற்றும் 12.04.1990 அன்று தகுதிகாண் பருவம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தனியருக்கு தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை, கூடுதல் சிறப்பு நிலை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது என்றும், தனியர் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எதுவும் நிலுவையில் இல்லை எனவும், தனியர் தன்விருப்ப ஓய்வில் செல்ல விதிகளின்படி 55 வயதினை கடந்தும், 20 ஆண்டுகள் நிகர பணிக்காலத்தினை முடித்திருக்க வேண்டும். அதன்படி 32 ஆண்டுகள் பணி நிறைவு செய்தும், 50 வயதினை கடந்துள்ளதாலும், தனியர் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் அளித்த 05.07.2021 நாளிட்ட மனுவினை பரிந்துரை செய்து தனியரை 02.10.2021 அன்று பிற்பகல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி, மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அவர்களின் 24.09.2021 நாளிட்ட குறிப்பில், திரு.எம்.சுப்பைய்யா, தூய்மைப் பணியாளர், பகுதி-21, கோட்டம்-96 என்பவர் சிறப்பு அதிகாரி / மன்றம் அவர்களிடம் 05.07.2021 அன்று அளித்த தன்விருப்ப ஓய்வின் மனுவினை ஏற்கப்பட்டு, சென்னை மாநகராட்சி தொழிலாளர் கூட்டுறவு சங்கம், சிந்தாதிரிப்பேட்டை அவர்களின் 15.07.2021 நாளிட்ட கடிதத்தில், தனியருக்கு சங்கத்தில் ரூ.3,20,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) கடன் நிலுவைத்தொகை மற்றும் இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை அவர்களால் தெரிவிக்கப்படும் தணிக்கைதடை மற்றும் நீண்டகால முன்பண ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் இத்தொகையினை தனியருக்கு வழங்கப்படும் ஓய்வூதிய

**பொ.து.ந.க.எண்.இ9/26838/2021**

பணிக்கொடையில் இருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, திரு.எம்.சுப்பைய்யா, தூய்மை பணியாளர், மண்டலம்-8 அவர்களை 02.10.2021 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 30.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன்விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*** * * * * ***

**பொ.து.ந.க.எண்.ஈ1/6367/2021**

**தீர்மானஎண்.765/2021** **நாள்:03-10-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 2015-2016 முதல் 2020-2021 ஆண்டிற்கு கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) பதவிக்கு இன்மை அறிக்கை வெளியிடவும் - 2021 - 2022 ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்கான தெரிவுப் பட்டியல் தயாரித்து மன்றத்தின் பின்னேற்புகுட்பட்டு - அரசுக்கு அனுப்பப்பட்டது - தெரிவுப்பட்டியலுக்கு அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது - செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பியமைக்கு பின்னேற்பு அனுமதியும் மற்றும் இறுதி தெரிவுப்பட்டியல் வெளியிட அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2021 – 2022 ஆம் ஆண்டிற்கு பின்வரும் பணி விதகளின்படி கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்கான தெரிவுப் பட்டியல் தயாரிப்பது குறித்தும் மற்றும் 2015-2016 ஆம் ஆண்டு முதல் 2020-2021 வரை கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) பதவியில் காலிப்பணியிடம் ஏதும் இல்லாததால் அந்த ஆண்டுகளுக்கு **"இன்மைப்பட்டியல்"** வெளியிடுவதற்கும், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 நடைபெறுவதை முன்னிட்டு, தேர்தல் நடைமுறை விதிகள் அமுலில் இருந்ததால் சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு பொதுத்துறையின்15.04.2021 மற்றும் 10.07.2021 நாளிட்ட கடிதத்தின் மூலம் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

| **Name of the Post** | **By Appointment Qualification (Existing)** | **By Promotion Qualification (Proposed)** |
|---|---|---|
| Superintending Engineer (Electrical)<br><br>Class-1A Rs, 1,23,100-215900/- (level 28- 7th pay commission) | 1) Degree in Electrical Engineering of any University or Institution recognized by the University Grants Commission for purposes of its grant; and<br><br>2) A minimum of seven years approved experience in Electrical Engineering of which not less than four years shall have been in the Construction Operation and Maintenance of high tension sub-stations and underground distribution systems and not less than that two years experience in responsible and administrative charge. | 1) Degree in Electrical & Electronics Engineering of any University or Institution Recognized by the University Grants Commission for purpose of its grant; and<br><br>2) A minimum of five years service must be completed in Assistant Divisional Electrical Engineer and two years service must be completed in Divisional Electrical Engineer Post. |

இதன் தொடர்ச்சியாக, அரசாணை (வா) எண். 111 ந. .நி.(ம)கு.வழங்கல் (மா.ந.3) துறை நாள்.13.09.2021ல் "பிப்ரவரி -1 ஐ அறுதி நாளாக கொண்ட 2015-2016 ஆம் ஆண்டு முதல் 2020-2021 வரையிலான ஆண்டுகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி, கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) பதவியில் காலிப்பணியிடம் ஏதும் இல்லாததால் **"இன்மைப்பட்டியல் (NIL Panel)"** வெளியிடலாம் எனக்கருதி, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது." எனவும்,

மற்றும், அரசாணை (ப) எண். 288 ந. .நி.(ம)கு.வழங்கல் (மா.ந.3) துறை நாள்.13.09.2021ல், "மேலே படிக்கப்பட்ட அரசாணையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள ஒரு செயற்பொறியாளர் பணியிடத்தை கண்காணிப்பு பொறியாளராக தரம் உயர்த்தியும், 6 புள்ளி விவரக் குறிப்பாளர் பணியிடங்களை ஒப்படைப்பு செய்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பெறப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மைச்செயலாளர் / ஆணையரின் செயற்குறிப்பு அரசால் பரிசீலிக்கப்பட்டு, பரிசீலனைக்குப்பின் அச்செயற்குறிப்பினை ஏற்று, 01.02.2021-ஐ அறுதி நாளாகக் கொண்ட, 2021-2022-ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி முழுத்தகுதிப் பெற்ற திரு. எம். பரந்தாமன் மற்றும் திருமதி. எஸ். விஜயலட்சுமி ஆகிய இரு கோட்ட மின் பொறியாளர்களைக் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது எனவும்,

3. மேலும், ஒப்புதல் அளிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள மின் பொறியாளர்களில் பணிமூப்பில் முதுநிலையில் உள்ள திரு.எம்.பரந்தாமன், மண்டல அலுவலர் / கோட்ட மின் பொறியாளர் அவர்களை கண்காணிப்புப் பொறியாளராக (மின்சாரம்), பதவி உயர்வு செய்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது காலியாக உள்ள நிலை உயர்த்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர் (மின்சாம்) பணியிடத்தில் பணியமர்வு செய்து அரசு ஆணையிடுகிறது" எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே,

<table>
<tr><td>அ)</td><td>தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 நடைபெறுவதை முன்னிட்டு, தேர்தல் நடைமுறை விதிகள் அமுலில் இருந்ததால் 2015-2016 ஆம் ஆண்டு முதல் 2020-2021 வரை கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) பதவியில் காலிப்பணியிடம் ஏதும் இல்லாததால் “இன்மைப்பட்டியல் (NIL Panel)" வெளியிட மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பியமைக்கும் மற்றும்<br>2021 - 2022 ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்கான திரு எம். பரந்தாமன் மண்டல அலுவலர் / கோட்ட மின் பொறியாளர் மற்றும் திருமதி எஸ். விஜயலட்சுமி ஆகிய இரு கோட்ட மின் பொறியாளர்களின் தெரிவுப் பட்டியல் தயாரித்து மன்றத்தின் பின்னேற்புகுட்பட்டு அரசுக்கு அனுப்பியமைக்கும், மன்றத்தின் பின்னேற்பு பெறவும்,</td></tr>
<tr><td>ஆ)</td><td>மேற்படி, அரசாணை (வா) எண். 111 ந. .நி.(ம)கு.வழங்கல் (மா.ந.3) துறை நாள். 13.09.2021ல் கண்டுள்ளவாறு 2015-16 ஆம் ஆண்டு முதல் 2020-21 வரை கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) பதவிக்கு “இன்மை பட்டியல்" வெளியிடவும், அரசாணை (ப) எண். 288 ந. .நி.(ம)கு.வழங்கல் (மா.ந.3) துறை நாள். 13.09.2021ன் படி, 01.02.2021 யை அறுதி நாளாகக்கொண்டு, 2021-2022 ஆம் ஆண்டிற்கு பின்வரும் கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் உள்ள கீழ்க்கண்ட 2 நபர்கள் கொண்ட மண்டல அலுவலர் / கோட்ட மின் பொறியாளர்களுக்கு தேர்ந்த பட்டியலின்படி இறுதி தெரிவுப்பட்டியல் வெளியிடவும்,
<table>
<tr><th>வ. எ ண்.</th><th>மண்டல அலுவலர் /<br>கோட்ட மின் பொறியாளர் bபயர்<br>(திருவாளர்கள்)</th><th>கோட்ட மின் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்</th></tr>
<tr><td>01</td><td>திரு.எம்.பரந்தாமன்,<br>கோட்ட மின் பொறியாளர்<br>தற்போது மண்டல அலுலவர்,<br>மண்டலம் 6</td><td>03.08.2012</td></tr>
<tr><td>02</td><td>திருமதி.எஸ்.விஜயலட்சுமி<br>கோட்ட மின் பொறியாளர்</td><td>03.08.2012</td></tr>
</table></td></tr>
</table>

| | |
|---|---|
| இ) | தற்போது நிலை உயர்த்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர் (மின்சாரம்) காலிப் பணியிடத்தில் மேற்படி தெரிவுப்பட்டியலில் கண்டுள்ள வரிசை எண் 1ல் உள்ள, மின் பொறியாளர்களில் பணி மூப்பில் முதுநிலையில் உள்ள திரு.எம்.பரந்தாமன், மண்டல அலுவலர் / கோட்ட மின் பொறியாளர் அவர்களுக்கு கண்காணிப்புப் பொறியாளராக (மின்சாரம்) பதவி உயர்வு வழங்கி, ரூ.123100 - 215900 (7வது ஊதியக்குழு பரிந்துரையின்படி Level 28) என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்யவும், |

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 30.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**R.D.C.No.M3/4015/2012**

**Resolution No.766/2021** **Date:03-10-2021**

**Greater Chennai Corporation – Revenue Department – Community Centers – Special announcement made in 2016-17 GCC Budget session – vide Council Resolution No: 478a/2016, dated: 20.08.2016 for the allotment of community centers to the public at free of cost - Due to huge fiscal pressure in Greater Chennai Corporation, Council Resolution passed vide Resolution No: 539/2017 dated:20.08.2017 to send the proposal to the Government to cancel the earlier Council Resolution – under Section-10 of Schedule II, Chennai City Municipal Corporation Act, 1919 – For orders.**

The Council has passed a Resolution vide No.478a/2016, dated: 20.08.2016, that all the community centers will be allotted for the public utility without collecting the rent amount, maintenance charges and, only refundable deposit amount will be collected from the public.

In the interest of administration the Greater Chennai Corporation, passed a Council Resolution vide No:539/2017, dated:20.08.2017 to send the proposal to Government to cancel the Council resolution No.478a/2016, dated 20.08.2016, by considering the following points and by invoking Section 44(2)(i) and 44(2)(b) of the Chennai City Municipal Corporation Act,1919.

1) The rent amount for community halls are being collected by Greater Chennai Corporation from the public are much lesser when compared to private Kalyana Mandapams / Marriage Halls / Convention Centers / Party Halls.
2) The Greater Chennai Corporation has purchased chair, table and other utensils for the community centers at a cost of approximately Rs.1.5 crores which is being issued to public on booking at free of cost on collection of refundable security deposit amount.
3) The maintenance cost incurred by the Greater Chennai Corporation for these 47 community centers is approximately Rs.85 lakhs per year.
4) The rent amount collected is essential for the proper maintenance of these community halls and provision of additional infrastructure and facilities.

Accordingly letter was sent to the Government, dated 05.09.2017 and last reminder dated 16.10.2019.

Due to huge fiscal pressure in Greater Chennai Corporation, even though is taking active steps to alleviate the situation the resolution No: 478a/2016 dated: 20.08.2016 has not been implemented so far.

As per Section 10, Schedule II of Chennai City Municipal Corporation Act, 1919 as read hereunder, the Greater Chennai Corporation is empowered to cancel the earlier resolution after getting approval of the Special Officer Council.

“Section 10: No resolution of the council shall be modified or cancelled within three months after the passing thereof except at a meeting specially convened in that behalf and by a resolution of the council supported by such number of members as shall constitute not less than two-thirds of the sanctioned strength of the council”.

Hence,

1) As per Section 10, Schedule II of Chennai City Municipal Corporation Act, 1919, to cancel the Council Resolution No.478-a/2016, dated 20.08.2016, that all the Community Centers will be allotted for the public utility without collecting the rent amount,

**R.D.C.No.M3/4015/2012**

2) to cancel Council Resolution No.539/2017, dated: 20.08.2017 requesting the Government to cancel the Resolution.No.478a/2016, dated 20.8.2016,

3) to intimate the fact to the Government.

Sl.No.1 to 3 above, orders of the Special Officer- Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.30.09.2021 is read.

**"Sl.No. 1 to 3 are approved by Special Officer- Standing Committee (Taxation and Finance) and Council."**

******

ம.அ1.ந.க.எண்/எச்.2/ 4944 /2021

**தீர்மான எண். 767/2021** **நாள்:03-10-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம்-1,பகுதி-1 முதல் 3- வார்டு-1முதல் 14 வரை –ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட மலேரியா பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2021ல் முடிவடைகிறது - 01.10.2021 முதல் 30.09.2022 வரை ஒருவருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 152 மலேரியா பணியாளர்ளை பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-1 (திருவொற்றியூர்), பகுதி 1,2 மற்றும் 3 (கோட்டம் 1 முதல் 14 வரை) 14 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் சுமார் 51507 வீடுகள் உள்ளன. இவைகளில் கொசுப்புழுக்கள் வளரிடங்களை கண்டறிந்து அழிக்கும் பணிகளான கிணறு, கீழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் மருந்திடும் பணி( AIO), தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சல் விபரம் சேகரிப்பு, மழைநீர் கால்வாய் மற்றும் கொசுப்புழுவை அழிக்கும் வகையில் மருந்து தெளிக்கும் பணி, காய்ச்சல் நோய் கண்டவர்களின் வீடுகளில் இரத்த தடவல்கள் எடுக்கும் பணி மற்றும் புகை மருந்து அடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோட்டம்-1 முதல் 14 வரை பொது சுகாதாரத்துறை மலேரியா பிரிவில் மொத்தம் 27 நிரந்தர மலேரியா பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சியுடன் திருவொற்றியூர் மற்றும் கத்திவாக்கம் நகராட்சிகள் இணைக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து அதிகப்படியான வீடுகளும் மக்கள் தொகையும் வளர்ச்சியடைந்து வருகின்றது.

எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் அல்லாமல் 152 தற்காலிக பணியாளர்கள் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தி நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது 30.09.2021 ல் முடிவடைகிறது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14.07.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தினக்கூலி ரூ.410/- என வ.எண் 64ல் நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

கோட்டம்-1 முதல் 14 வரை வார்டு வாரியாக நிரந்தர மலேரியா பணியாளர்கள் மற்றும் NULM குழுக்கள் மூலம் தினக்கூலி அடிப்படையில் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை விபரம்

| வ.எண் | கோட்டம் | நிரந்தர பணியாளர்கள் | தேவைப்படும் தினக்கூலி பணியாளர்கள் |
|---|---|---|---|
| 1 | 1 | 2 | 11 |
| 2 | 2 | 2 | 9 |
| 3 | 3 | 3 | 20 |
| 4 | 4 | 2 | 10 |
| 5 | 5 | 2 | 10 |
| 6 | 6 | 2 | 13 |
| 7 | 7 | 4 | 12 |
| 8 | 8 | 1 | 9 |
| 9 | 9 | 2 | 9 |
| 10 | 10 | 2 | 10 |
| 11 | 11 | 1 | 10 |
| 12 | 12 | 1 | 10 |
| 13 | 13 | 2 | 9 |
| 14 | 14 | 1 | 10 |
| மொத்தம் | | **27** | **152** |

**ம.அ1.ந.க.எண்/எச்.2/ 4944 /2021**

எனவே,

அ) மண்டலம்-1 பகுதி-1,2 மற்றும் 3 கோட்டம்-1 முதல் 14 வரை உள்ள பகுதிகளுக்கு 152 தற்காலிக மலேரியா பணியாளர்களை 01.10.2021 முதல் 30.09.2022 வரை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தவும், மாவட்ட ஆட்சியரின் விலைப்பட்டியலின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு ரூ.410 வீதம் (152 நபர்கள் X 365 நாட்கள்) ரூ.2,27,46,800/- (ரூபாய் இரண்டு கோடியே இருபத்து ஏழு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து எண்ணூறு மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,

ஆ) மேற்கண்ட 152 மலேரியா பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (NULM) பணியமர்த்தி கொள்ளவும்,

இ) சுகாதார துறையின் தலைப்பு குறியீட்டு எண். 30-30-02- கணக்கு தலைப்பு எண். 210-10-06-02 என்ற தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**ம.அ.5/சு.து/சு3/ந.க.எண்.2570/2021**

**தீர்மான எண். 768/2021** **நாள்:03-10-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5 சுகாதாரப் பிரிவு - கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 109 தற்காலிக பணியாளர்கள் 01.09.2021 முதல் 30.11.2021 வரை 91 நாட்களுக்கு நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.**

27.08.2021 அன்று நடைபெற்ற ஆணையர் அவர்களின் கலந்தாய்வு கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு செய்ய 109 பணியாளர்களை (FEVER SURVEY WORKERS) மாத ஊதிய அடிப்படையில் ரூ.12,121/- என நிர்ணயம் செய்து 91 நாட்களுக்கு (01.09.2021 முதல் 30.11.2021வரை) பணியமர்த்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மண்டலம் - 5 க்குட்பட்ட கோட்டம்- 49 தொடக்கம் 63 முடிய அனைத்து தெருக்களிலும் வீடு வீடாக சென்று காய்ச்சல் இருமல் சளி தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும், மேலும், கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளிலுள்ள வீடுகளில் பொருளாதாரம் சுய விவரம் குறித்த கண்கெடுப்பு செய்ய, 109 பணியாளர்களை (FEVER SURVEY WORKERS) 91 நாட்களுக்கு (01.09.2021 முதல் 30.11.2021 வரை) நியமிக்க வேண்டியுள்ளது.

அதன் விவரம் கோட்ட வாரியாக கீழ்கண்டவாறு

| வ.எண். | கோட்டம் | தற்போது தேவைப்படும் FSW பணியாளர்கள் 01.09.2021 முதல் 31.10.2021 வரை |
|---|---|---|
| 1 | 49 | 5 |
| 2 | 50 | 7 |
| 3 | 51 | 5 |
| 4 | 52 | 5 |
| 5 | 53 | 7 |
| 6 | 54 | 7 |
| 7 | 55 | 7 |
| 8 | 56 | 7 |
| 9 | 57 | 9 |
| 10 | 58 | 9 |
| 11 | 59 | 9 |
| 12 | 60 | 9 |
| 13 | 61 | 9 |
| 14 | 62 | 7 |
| 15 | 63 | 7 |
| மொத்தம் | | 109 |

எனவே,

1. மண்டலம் - 5 ல் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக கோட்டம் - 49 தொடக்கம் 63 முடிய அனைத்து தெருக்களுக்கும் வீடு வீடாக சென்று காய்ச்சல், இருமல், சளி தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மேலும், கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளிலும் வீடுகளில் பொருளாதாரம் சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 109 பணியாளர்களை (FEVER SURVEY WORKERS), 91 நாட்களுக்கு (01.09.2021 முதல் 30.11.2021 வரை) பணியமர்த்த அனுமதி வேண்டியும்.
2. பணியாளர்களுக்கு (FEVER SURVEY WORKERS) ஊதியமாக ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ரூ. 391 X 91 நாட்கள் X 109 நபர்கள் = ரூ.38,78,329/- (ரூபாய் முப்பத்தெட்டு லட்சத்து எழுபத்தெட்டாயிரத்து முந்நூற்று இருபத்தொன்பது மட்டும்) வழங்கவும்,

**ம.அ.5/சு.து/சு3/ந.க.எண்.2570/2021**

3. இச்செலவின தொகையை கணக்கு தலைப்பு 20-21-07 கணக்கு குறியீடு எண்.230-701-203 நிதியின் கீழ் மொத்த தொகை ரூ. 391 X 91 நாட்கள் X 109 நபர்கள் = ரூ.38,78,329/- நிதி ஒதுக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.அ.5சு.து./சு.3/ந.க.எண்.2349/2021**

**தீர்மான எண். 769/2021** **நாள்:06-10-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - மண்டலம் -5 - கோட்டம் -49 முதல் 63வரை கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொண்டுவரும் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம்(NULM) சுய உதவிக்குழு குழுக்கள் வழியாக கொசு ஒழிப்பு பணிக்காக 125 நபர்கள் மற்றும் ரிப்பன் மாளிகை, பணிக்காக தேவைப்படும் 16 நபர்கள் மொத்தம் 141 பணியாளர்களை 01.10.2021 தொடக்கம் 30.09.2022 முடிய ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, மண்டலம் -5, கோட்டம் 49 முதல் 63 வரையுள்ள கோட்டங்களில் வீட்டிலுள்ள நீர்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம் கொசு மருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளவும், 141 பணியாளர்கள் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) சுய உதவிக்குழு மூலம் 11 குழுக்களாக பிரித்து, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் 29.09.2020 நாளிட்ட நிர்வாக அனுமதி மற்றும் சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மானம் எண் : 858/2020 நாள்: 28.10.2020ன் அடிப்படையில் கடந்த 01.10.2020 தொடங்கி 141 எண்ணிக்கையிலான பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிலையில் வருகின்ற 30.09.2021 அன்றோடு ஓராண்டு பணிக்காலம் நிறைவடைகிறது. பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன் கருதியும் இப்பணிகளை தொடர வேண்டியுள்ளது.

மேலும், தலைமை செயலகம், ரிப்பன் மாளிகை, உயர்நீதி மன்றம், காவல் ஆணையர் அலுவலகம், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, எழும்பூர் அரசு கண் மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம் மகப்பேறு மருத்துவமனை மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் போன்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை அரசு அலுவலகங்கள் மண்டலம்-5க்குட்படட் எல்லையில் இயங்கி வருவதால், தனிக்கவனம் செலுத்தும் வகையில், கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த 141 பணியாளர்களை பணியமர்த்துவது அவசியமாகிறது.

இதனடிப்படையில், தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) குழுக்கள் மூலம் 141 பணியாளர்களை தற்தாலிகமாக தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்த சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14.07.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எ | பணியாளர்கள் எண்ணிக்கை | ஒரு நாள் கூலி | 01.010.2021 தொடங்கி 30.09.2022முடிய | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | 141 | ரூ.410 . 00 | 365 நாட்கள் | ரூ. 2,11,00,650 . 00 |

ஆக, 01.10.2021 தொடங்கி 30.09.2022 முடிய 141 நபர்களுக்கு நாளொன்றுக்கு தினக்கூலி ரூ.410/- (எழுத்தால் ரூபாய் நானூற்று பத்து மட்டும்) வீதம் 410 X 365 X 141 = ரூ.2,11,00,650/- (எழுத்தால் ரூபாய் இரண்டு கோடியே பதினோரு லட்சத்து அறுநூற்றைம்பது மட்டும்) தேவைப்படுகிறது. இத்தொகையை கணக்கு குறியீடு எண் : 30-32-02 மற்றும் கணக்கு தலைப்பு எண் : 210-10-06-02 தலைப்பில் ஒதுக்கீடு செய்து தொடர்ந்து பணியினை மேற்கொள்ள,

<u>ம.அ.5.சு.து./சு.3/ந.க.எண்.2349/2021</u>

1. மண்டலம் – 5க்கு 141 தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க பணியாளர்களை அடுத்த ஓராண்டிற்கு (01.10.2021 தொடங்கி 30.09.2022முடிய) தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தவும்,
2. 141 தற்காலிக பணியாளர்களுக்கு, அடுத்த ஓராண்டிற்கு (01.10.2021 தொடங்கி 30.09.2022முடிய) தினக்கூலி வழங்கிட கணக்கு குறியீடு எண் : 30-32-02 மற்றும் கணக்கு தலைப்பு எண் : 210-10-06-02இல் ரூ.2,11,00,650/- (எழுத்தால் ரூபாய் இரண்டு கோடியே பதினோரு லட்சத்து அறுநூற்றைம்பது மட்டும்) நிதி ஒதுக்கிடவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.09.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

* * * * * *

பது.ந.க.எண்.D1/LA/SD/WDCN03/0433/2021

தீர்மானஎண்.770/2021 நாள்:06-10-2021

## தானப்பத்திரம்

மண்டலம்-3, கோட்டம்-25ல் Mr. R. Muniyandi @ Chandran அவர்கள் Sri Balaji Avenue IV, Old S.No.594 part, New T.S.No.48/1 & 48/2, Block No.1 Ward No.C of Madhavaram village ல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN03/00433/2021 நாள்:11.08.2021ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்.09.12.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை, திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் Mr. R. Muniyandi @ Chandran மனைப்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ)Mr. R. Muniyandi @ Chandran அவர்கள் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி 3321.46 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 593.21 சதுர மீட்டர் நிலம் பொது பயன்பாட்டிற்கான 14.25 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ)Mr. R. Muniyandi @ Chandran மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, தனி வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ)விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக 7.32 மீட்டர் அகலம் உள்ள மனைப்பிரிவு சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ)Tamil Nadu Combined Development & Building Rules, 2019 ன் படி *10,000* ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகை யாகவோ செலுத்தலாம்.

*(உ)*மனைப்பிரிவின் பரப்பளவு 10,000 ச.மீ க்குள் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீடு நிலமாக அளிப்பதற்கு ஈடாக தொகையினை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார் .

(ஊ)Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO - விற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். Mr. R. Muniyandi @ Chandran அவர்கள் அதற்கேற்றவாறு 14.25 ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் 14.25ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCOவிற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

**ப.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN03/0433/2021**

(எ)மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான தோராய அபிவிருத்தி கட்டணம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்க வேண்டும். மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான செலவின தொகை ரூ.8,84,000/- ஆகும்.

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் Mr. R. Muniyandi @ Chandran அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென ஒதுக்கப்பட்ட 593.21 ச.மீ பரப்பளவு நிலமும், பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்காக 14.25ச.மீ பரப்பளவு நிலமும் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) Sri Balaji Avenue IV, Old S.No.594 part, New T.S.No.48/1 & 48/2, Block No.1 Ward No.C of Madhavaram villageல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 593.21 சதுர மீட்டர் நிலம், சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 14.25ச.மீ நிலத்தை Mr. R. Muniyandi @ Chandran அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் மேம்பாட்டு பணிகள் மற்றும் தெரு விளக்குகள் அமைக்க செலவின தொகை ரூ.8,84,000/- ஐ (ரூபாய் எட்டு லட்சத்து எண்பத்தி நான்காயிரம் மட்டும்) மனை உரிமையாளரிடமிருந்து “ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி” என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 03.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தானப்பத்திரம் 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**ம.அ.6ந.க.எண்.இ1/6808/2021**

**தீர்மான எண். 771/2021** **நாள்:04-10-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6 - கோட்டம் -68 திரு.வி.க நகர் - எஸ்.ஆர்.பி கோவில் வடக்கு தெருவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பூங்காவிற்கு கலைஞர் மு.கருணாநிதி பூங்கா என பெயரிட அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, கோட்டம்.68ல் திரு.வி.க.நகர், எஸ்.ஆர்.பி கோவில் வடக்கு தெருவில் ரூ.56,00,126/- (ரூபாய் ஐம்பத்தாறு இலட்சத்து நூற்று இருபத்தாறு மட்டும்) செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பூங்காவிற்கு கலைஞர் மு.கருணாநிதி பூங்கா என பெயரிட சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"பூங்காவிற்கு கலைஞர் மு.கருணாநிதி பூங்கா என பெயரிட சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**சு.து.ந.க.எண். பி2 /2515/2020**

**தீர்மான எண். 772/2021** **நாள்:06-10-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி - பேரிடர் பணிகள் மேற்கொள்ளவும் - கோவிட் தடுப்பூசி பணிகளை தீவிரப்படுத்தவும், அவசர அவசியம் கருதி 200 கணினி பதிவாளர்களை 31.03.2021 முதல் 30.09.2021 வரை 6 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. S.R. Enterprises நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டது - மேலும் (01.10.2021 முதல் 15.11.2021 வரை) 1.5 மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்ய அனுமதி.**

ஆணையர் அவர்களின் 30.03.2021 நாளிட்ட ஆணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறையில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) உலகமெங்கும் 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. அரசாணையில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடிவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. படிப்படியாக குறைந்து வந்த இந்த நோயின் தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் ஒரு பகுதியாக கொரோனா நோய் தடுப்பிற்கென மத்திய, மாநில அரசுகளின் வழிகாட்டுதல்களின்படி, மருத்துவர்கள்,. மருத்துவ சார் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கோவிட்-19தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 45 வயது முதல் 59 வயது முடிய இணை நோய் (Co-Morbid) உள்ள நோயாளிகளுக்கும். 60 வயதிற்கு மேல் அனைத்து பொதுமக்களுக்கும், கோவிட் 19 தடுப்பூசி இலவசமாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 வரையிலும், தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் காலை 9.00 மணி முதல் 5.00 மணி வரையிலும் போடப்பட்டு வருகின்றது.

தடுப்பூசி போடுபவர்களின் விவரங்கள் உடனுக்குடன் மத்திய அரசின் Web Portal லில் பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது சுகாதாரத்துறையின் சார்பாக ரிப்பன் கட்டடத்தில் மாநகர நல அலுவலர் அவர்களின் தலைமையில் ஒரு கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகின்றது.

- இந்த கட்டுப்பாட்டு அறையில் தினந்தோறும் அரசிடம் இருந்து கோவிட் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் பெறப்பட்டு அனைத்து மண்டலங்களுக்கும் அளிக்கப்படுகின்றன.
- மேலும் நோய் பாதித்தவர்களின் உடனிருப்பவர்கள் (Contact Tracing) விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.
- பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் SARI/ILI (Influenza Like illness) பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்பட்டும் மற்றும் ஏற்கெனவே நோயினால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில் இருப்பவர்களின் கொரோனா மாதிரிகள் (Nasopharyngeal/ Oropharygeal) எடுக்கப்பட்டு RT-PCR முறையில் பரிசோதனை செய்யபடுகின்றனர். இதற்கான முடிவுகள் 24 மணிநேரம் கழித்து உரிய ஆய்வகங்களில் இருந்து கட்டுப்பாட்டு அறைக்கு அளிக்கப்படுகின்றது. இந்த அறிக்கை மண்டலங்களுக்கு அளிக்கப்பட வேண்டியுள்ளது.

- மாநகராட்சி பகுதிகளில் எடுக்கப்படும் பரிசோதனை மாதிரிகள் State Public Health Lab மற்றும் King Institute க்கு அனுப்பப்படுகின்றன. இந்த பரிசோதனை கூடத்தில் அறிக்கைகள் அனுப்ப கணினி பதிவாளர்கள் தேவைப்படுகின்றனர்.
- ஸ்டேன்லி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, ஓமந்தூரார் அரசு கல்லூரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, ராஜீவ் காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, ஆகிய மருத்துவமனைகளிலும் மாநகராட்சிப்பகுதிகளில் கோவிட் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் விவரங்களை சேகரிக்க கணினி பதிவாளர்கள் தேவைப்படுகினறனர்.
- இயக்குநகரகம், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறை மற்றும் கிங் இன்ஸ்டிடியூட் ஆகிய இடங்களிலும் தரவுகள் சேகரிக்க கணினி பதிவாளர்கள் தேவைப்படுகின்றனர்.
- கோவிட் நோயினால் ஏற்படும் இறப்புகள் குறித்த அறிக்கைகள் மருத்துவமனை மற்றும் மண்டலங்களில் இருந்து பெறப்பட வேண்டியுள்ளது. இதற்கெனவும் கணினி பதிவாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டியுள்ளது.
- பொது சுகாதாத்துறை அன்றி, மருத்துவ சேவைகள் துறை பொதுத்துறை போன்ற இதர துறைகளிலும் கோவிட் நோய் கட்டுப்பாட்டு பணிகள் மேற்கொள்ள கணினி பதிவாளர்கள் தேவைப்படுகின்றனர்.

எனவே, இப்பணிக்கென சுமார் 200 கணினி பதிவாளர்கள் தேவைப்படும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த கணினி பதிவாளர்களை தேவையின் அடிப்படையில் தேவைப்படும் இடங்களில் பணியமர்த்தலாம்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான 200 கணினி பதிவாளர்களை (01.10.2021 முதல் 15.11.2021 வரை) 1.5 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தலாம்.

எனவே, இப்பணிக்கென கீழ்க்கண்ட அளவில் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**Office workable rate**

| Sl. No | Name of the Post | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25%) (Rs) | Admin Charges (10%) | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total 6months Rs (6x7x6) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Data Entry Operators | 13890 | 1806 | 451 | 1000 | 3086 | 20233 | 200 | 2,42,79,600 |

The Tamil Nadu Transparency Tender Act-1998 Section 10 (2) விதியின்படி ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தினை 25% வரையில் நீட்டிப்பு செய்யலாம்.

| | |
|---|---|
| Total Contract Value | ரூ. 2,42,79,600 |
| 25% of Contract value | ரூ.60,69,900 |
| Extension work value | ரூ.60,69,900 |

**Office workable rate**

| Sl. No | Name of the Post | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25%) (Rs) | Admin Charges (10%) | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total 1.5 months Rs (6x7x1.5) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Data Entry Operators | 13890 | 1806 | 451 | 1000 | 3086 | 20233 | 200 | 60,69,900 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் கொரோனா நோய் தடுப்பு பணி மற்றும் பேரிடர் பணிகள் மேற்கொள்ள, அவசர அவசியம் கருதி 200 கணினி பதிவாளர்களை 1.5 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தேவையின் அடிப்படையில், தேவைப்படும் இடங்களில் பணியமர்த்த M/s. SR Enterprises நிறுவனத்தின் பணியாணை வழங்க அனுமதியும்,
2. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.**60,69,900/- (Rupees Sixty Lakhs Sixty Nine Thousand Nine Hundred and Only)** மேற்கொள்ள அனுமதிக்கும்,
3. மேற்கண்ட நிறுவனத்தினரிடம் பிணை வைப்பு தொகையாக பெறுவதில் இருந்து விலக்கு அளிக்கவும் மற்றும் ஒப்பந்தம் செய்வதில் இருந்து விலக்கு அளிக்க அனுமதிக்கும்,
4. பணி முடிந்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் இருந்து வருகை பதிவு சான்று பெற்று பட்டி தீர்வு செய்ய அனுமதிக்கும்,
5. இச்செலவினம் பெருநகர சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் ரூ.60.70 இலட்சத்தினை கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

**Deputy Commissioner (Revenue&Finance) approval, the remarks of C.H.O dated.30.09.2021 as follows:**

**“The available manpower i.e Data entry operator may be reduced to 100 from 200(50%) reduction. The contract may be extended for 2months”.**

முதன்மைச்செயலர்/ஆணையரது 01.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“துணை ஆணையர் (வருவாய் & நிதி) அவர்களின் குறிப்புடன், வ.எண்.1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

* * * * * *

**E.L.D.C.No.SMII/P10/2371/2021**

**Resolution No.773/2021** **Date:07-10-2021**

**Greater Chennai Corporation – Electrical Department – Administration sanction obtained – Tender called for Operation and Maintenance of 1,73,489 nos. of street lamp post and 181 nos. of high mast including manpower , Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zones1, 2, 3, 4, 6, 7, 11, 12, 14 & 15 as 10 separate tenders –Lower and reduced offer recommended for acceptance – For orders.**

Administrative Sanction was accorded vide Special Officer, Council Resolution No.630/2021, dated.02.08.2021, for Operation and Maintenance of 1,73,489nos. of street lamp post and 181 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zones1, 2, 3, 4, 6, 7, 11, 12, 14 & 15 as 10 separate tenders

Special Officer, Council Resolution No.630/2021 Dt 02.08.2021, Short E-tenders has been floated with due date on 25.08.2021 for the work "Operation and Maintenance of 1,73,489 nos. of street lamp post and 181 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zones 1, 2, 3, 4, 6, 7, 11, 12, 14 & 15 "as10separate tenders in tn.tenders.gov.in website .

Subsequently e-Tenders have been called for the above work in two cover system and the Tender notice were published in the English daily Deccan Chronicle , Tamil daily Tamil Murasu and the Greater Chennai Corporation News Bulletin on 05.08.2021. No bids were received for Zone 12 on the due date of opening 25.08.2021. Orders of SE/Electrical dated 25.08.2021 has been obtained to call Re E Tender for Operation & Maintenance contract in Zone 12 with due date of opening as 09.09.2021.Tender notice were published in the English daily Deccan Chronicle, Tamil daily Thee kathir on 27.08.2021 and the Greater Chennai Corporation News Bulletin on 26.08.2021.

The Financial Bids of the qualified bidders were opened on 16.09.2021,17.09.2021 & 22.09.2021 in the presence of the bidders. The details of the bidders, their quoted and reduced rates for the 10 separate tenders for the Operation and Maintenance of 1,73,489 nos. of street lamp post and 181 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zones 1, 2, 3, 4, 6, 7, 11, 12, 14 & 15 is as listed below:

TABLE 1:

| Sl. No | File No. | Description of work | Tender value (incl. Of GST) in Rs. | Name of Participated bidders | **L1 Bidder** | Quoted amount of L1 bidder& Percentage when compared to the tender cost (incl.of GST) in Rs. |
|---|---|---|---|---|---|---|
| 1 | E.L.D.C.NO./SMII/ P10/2371/2021 | Operation and Maintenance of 12068 nos. of street lamp post and 22 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 1. | 1,63,24,303.44 | 1. M/s R.V.Engineering Construction<br>2. M/s.RKM Electricals | M/s R.V.Engineering Construction | **2,05,31,565.60**<br>**(+) 25.77%** |

**E.L.D.C.No.SMII/P10/2371/2021**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | E.L.D.C.NO./SMII/ P10/2372/2021 | Operation and Maintenance of 9945 nos. of street lamp post and 7 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 2. | 1,34,30,554.69 | 1.M/s.Dhamodharan Engineering Enterprises<br>2. M/s R.V.EngineeringConstruction<br>3. M/s.RKM Electricals | M/s.RKM Electricals | **1,66,00,334.40**<br><br>**(+)23.6%** |
| 3 | E.L.D.C.NO./SMII/ P10/2373/2021 | Operation and Maintenance of 17369 nos. of street lamp post and 17 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 3. | 2,03,75,991.37 | 1.M/s.Murugan Electrical Traders<br>2.M/s.Orient Poles | M/s.Murugan Electrical Traders | **2,53,16,380.80**<br>**(+)24.25%** |
| 4 | E.L.D.C.NO./SMII/ P10/2374/2021 | Operation and Maintenance of 17744 nos. of street lamp post and 25 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 4 | 2,18,92,003.18 | 1.M/s.B.Muralibabu<br><br>2. M/s R.V. Engineering Construction | M/s.B.Murali babu | **2,72,54,559.60**<br>**(+)24.50%** |
| 5 | E.L.D.C.NO./SMII/ P10/2375/2021 | Operation and Maintenance of 16895 nos. of street lamp post and 32 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 6 | 2,05,17,637.41 | 1.M/s.Murugan Electrical Traders<br><br>2.M/s.V.K.Contractors | M/s.Murugan Electrical Traders | **2,54,35,324.80**<br>**(+)23.96%** |
| 6 | E.L.D.C.NO./SMII/ P10/2376/2021 | Operation and Maintenance of 24778 nos. of street lamp post and 38 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 7 | 2,65,95,169.30 | 1. M/s R.V Engineering Construction<br>2. M/s V.K Contractors | M/s V.K Contractors | **3,38,02,925.28**<br>**(+)27.1%** |
| 7 | E.L.D.C.NO./SMII/ P10/2377/2021 | Operation and Maintenance of 19161 nos. of street lamp post and 6 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 11 | 2,20,37,020.38 | 1. M/s Murugan Electrical Traders<br>2.M/s.Kumaran Industries | M/s.Kumaran Industries | **2,74,62,941.40**<br>**(+)24.62%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | E.L.D.C.NO./SMII/ P10/2378/2021 | Operation and Maintenance of 15115 nos. of street lamp post and 10 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 12. | 1,84,91,793.44 | 1. M/s Hi -Tech Tronics 2. M/s Sunrise Solar Systems 3. M/s V.K Contractors | M/s Hi -Tech Tronics | **2,32,90,956 (+) 25.95%** |
| 9 | E.L.D.C.NO./SMII/ P10/2379/2021 | Operation and Maintenance of 21916 nos. of street lamp post and 14 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 14. | 2,45,69,325.34 | 1. M/s Orient Poles 2. M/s.R.K.M Electricals | M/s.R.K.M Electricals | **3,07,21,536 (+)25.04%** |
| 10 | E.L.D.C.NO./SMII/ P10/2380/2021 | Operation and Maintenance of 18498 nos. of street lamp post and 10 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 15. | 2,15,30,559.39 | 1. M/s Murugan Electrical Traders 2. M/s Orient Poles | M/s Murugan Electrical Traders | **2,88,42,720 (+)33.96%** |

The reduced rates of the L1 bidders were obtained vide negotiation letter dated 17.09.2021, 20.09.2021 ,21.09.2021, 22.09.2021& 23.09.2021.The details of the final negotiated rate given by the L1 bidders is as listed below:

TABLE 2:

| Sl. No | File No. | Description of work | Tender value (incl. Of GST) in Rs. | **L1 Bidder** | Quoted rate of L1 bidder& Percentage when compared to the tender cost (incl.of GST) in Rs. | **Reduced rate** of L1 bidder after 3rd negotiation & Percentage when compared to the tender cost (incl.of GST) in Rs. |
|---|---|---|---|---|---|---|
| 1 | E.L.D.C.NO./SM II/P10/2371/2021 | Operation and Maintenance of 12068 nos. of street lamp post and 22 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 1. | 1,63,24,303.44 | M/s R.V.Engineering Construction | 2,05,31,565.60 (+) 25.77 % | **1,68,10,101.60 (+)2.98%** |

**E.L.D.C.No.SMII/P10/2371/2021**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | E.L.D.C.NO./SM II/P10/2372/2021 | Operation and Maintenance of 9945 nos. of street lamp post and 7 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 2. | 1,34,30,554.69 | M/s.RKM Electricals | 1,66,00,334.40 (+)23.6 % | **1,38,27,327.84 (+)2.95%** |
| 3 | E.L.D.C.NO./SM II/P10/2373/2021 | Operation and Maintenance of 17369 nos. of street lamp post and 17 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 3. | 2,03,75,991.37 | M/s.Murugan Electrical Traders | 2,53,16,380.80 (+)24.25% | **2,11,61,412.96 (+)3.85%** |
| 4 | E.L.D.C.NO./SM II/P10/2374/2021 | Operation and Maintenance of 17744 nos. of street lamp post and 25 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 4 | 2,18,92,003.18 | M/s.B.MuraliBabu | 2,72,54,559.60 (+)24.50% | **2,25,66,083.04 (+) 3.08%** |
| 5 | E.L.D.C.NO./SM II/P10/2375/2021 | Operation and Maintenance of 16895 nos. of street lamp post and 32 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 6 | 2,05,17,637.41 | M/s.Murugan Electrical Traders | 2,54,35,324.80 (+)23.96% | **2,12,15,051.04 (+)3.40%** |
| 6 | E.L.D.C.NO./SM II/P10/2376/2021 | Operation and Maintenance of 24778 nos. of street lamp post and 38 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 7 | 2,65,95,169.30 | M/s V.K Contractors | 3,38,02,925.28 (+)27.1% | **2,77,42,018.08 (+) 4.31%** |
| 7 | E.L.D.C.NO./SM II/P10/2377/2021 | Operation and Maintenance of 19161 nos. of street lamp post and 6 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 11 | 2,20,37,020.38 | M/s.Kumaran Industries | 2,74,62,941.40 (+)24.62% | **2,28,46,792.80 (+)3.67%** |

**E.L.D.C.No.SMII/P10/2371/2021**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | E.L.D.C.NO./SM II/P10/2378/2021 | Operation and Maintenance of 15115 nos. of street lamp post and 10 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 12. | 1,84,91,793.44 | M/s Hi-Tech Tronics | 2,32,90,956.00 (+)25.95% | **1,90,39,395.36 (+) 2.96%** |
| 9 | E.L.D.C.NO./SM II/P10/2379/2021 | Operation and Maintenance of 21916 nos. of street lamp post and 14 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 14. | 2,45,69,325.34 | M/s.R.K.M Electricals | 3,07,21,536 (+)25.04% | **2,55,66,362.40 (+)4.06%** |
| 10 | E.L.D.C.NO./SM II/P10/2380/2021 | Operation and Maintenance of 18498 nos. of street lamp post and 10 nos. of high mast including manpower ,Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 15. | 2,15,30,559.39 | M/s Murugan Electrical Traders | 2,88,42,720 (+)33.96% | **2,23,02,878.88 (+)3.59%** |

The L1 bidders have stated in their letter dated 21.09.2021 & 23.09.2021 that "We are unable to reduce the price further due to price increase of the following reasons:

1. Due to COVID-19 pandemic situation the prices of the diesel, labour, insurance for vehicles and the labours have raised abnormally
2. Due to increase of labour charges by 30% in the last 4 months, there is no time limit (day or night) for staffs they have to attend the fault then and there
3. For the vehicle the driver salary has increased by 30%,
4. Diesel price increased day to day by Rs.1 past 3 months it has increased by Rs.7
5. Insurance by 36%
6. FC charges by 40%
7. Road tax by 20% in the past 6 months"

The reduced offers of L1 bidders are(+)2.95% to (+) 4.31% higher than the estimated cost.

The O&M contractor shall rectify the defect / fault within 24 hours of complaint received. If he fails to comply, the penalty is imposed as follows:

i) Beyond 24hrs - 5% of total cost per pole /year {(Tender value)/(Total no. of street lamp post + No. of Highmast)}

ii) Beyond 36 hrsUpto48hrs - 10% of total cost per pole /year {(Tender value)/(Total no. of street lamp post + No. of Highmast)}

iii) Beyond 48hrs - 15%of total cost per pole /year {(Tender value)/ (Total no. of street lamp post + No. of Highmast)}per day thereafter will be recovered until rectified.

iv) If on any day, less no. of persons are noticed, in that case the penalty at Rs.1200/- per person / day for Electrician Grade –I and Rs. 1000/- for Electrical Helper will be recovered. And if the agency fails to provide no. of mention ladder mounted vehicle / vehicles in healthy condition, then the Rs.4000/- per day per Aluminium ladder vehicle and Rs. 7000/- for Hydraulic ladder vehicle will be deducted from the monthly bill of the agency.

v) Maintaining all the luminaries, Junction boxes, poles, Feeder pillar, cable termination with glands and lugs, etc. as specified in the tender documents. Any incomplete work will be considered as non-working of light and penalty cause as per non working street light shall be applicable.

vi) Switching ON and OFF of street light poles as per schedule given by Chennai Corporation and the contractor has to submit the report of the same in every fifteen days time. If not followed the same, the penalty of Rs.500/- per day will be charged.

The subject was placed in Tender Scrutinizing Committee (TSC) on 27.09.2021.The TSC recommended for the approval of the above reduced offers of L1 bidders shown in TABLE 2, by Special Officer (Council).

Hence,

1. To accept the reduced offer of the L1 bidders recommended by the Tender Scrutinizing Committee as shown in Table 2 for 10 separate tenders for the Operation and Maintenance of 1,73,489 nos. of street lamp post and 181 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zones 1, 2, 3, 4, 6, 7, 11, 12, 14 & 15 and to issue work orders.
2. To approve the revised administration sanction for additional funds for the excess bid offer amount by the L1 bidders (as per the remarks of FA in the Tender Scrutinizing Committee).
3. To meet out the expenditure for the above work from the Revenue Budget head of the Electrical Department from the respective financial years.

Sl.No.1 to 3 above, orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.04.10.2021 is read.

**"Sl.No. 1 to 3 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

**********

**ம.அ.5ந.க.எண்.561/2020**

**தீர்மானஎண்.774/2021** **நாள்:10-10-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5 , பகுதி - 14 , கோட்டம் - 61, டிரைவர் தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி கோட்ட அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 05 , பகுதி – 14 , கோட்டம் – 61, டிரைவர் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கோட்ட அலுவலக கட்டிடம் மிகவும் பழுதடைந்து பராமரிப்பு செய்ய முடியாத நிலையில் உள்ளது. இக்கட்டிடத்தில் உதவி பொறியாளர் அலுவலகம், துப்புரவு ஆய்வாளர் அலுவலகம், சுகாதார ஆய்வாளர் அலுவலகம், அரசு இ- சேவை மையம், வரி வசூலிப்போர் அலுவலகம் என பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் அலுவலகங்கள் இயங்கி வருகிறது. மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள வார்டு அலுவலகமானது 2000-ம் ஆண்டு கட்டப்பட்டது. இக்கட்டிடமானது மிகவும் பழுதடைந்து மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ளதால் இந்த வார்டு அலுவலக கட்டிடத்தை இடித்துவிட்டு புதிதாக கட்டுதல் அவசியமாகிறது.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரை தளம் மற்றும் முதல் தளம் = 1403 சதுர அடி

புத்தக மதிப்பு = ரூ. 6,55,000/-

எனவே, வார்டு-61க்கு உட்பட்ட டிரைவர் தெருவில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த கோட்ட அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 07.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“பழுதடைந்த கோட்ட அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

* * * * * *

**பே.சா.து.ந.க.எண்.பி4/3831/2021**

**தீர்மானஎண்.775/2021** **நாள்:10-10-2021**

**மதிப்பீடு 2020-21 - பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை - மண்டலம்-4, வார்டு - 37ல் உள்ள கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் (Reach -1) புதியதாக RCC M30 கான்கிரீட் மூலமாக சாலை அமைக்கும் பணிக்காக 2020-21ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் ரூ. 3,18,85,000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து சாலைகள் துறை மண்டலம்-4, வார்டு – 37ல் உள்ள கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் புதியதாக RCC M30 கான்கிரீட் மூலமாக சாலை அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

01. பணியின் பெயர் :

| வ. எண். | மண்டலம் / வார்டு எண். | சாலையின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 4/37 | கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் (நீளம்: 400மீ) | கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் புதியதாக RCC M30 கான்கிரீட் மூலமாக சாலை அமைக்கும் பணி | ரூ. 3,18,85,000/- |

02. பரிந்துரை செய்தவரின் விவரம் : முதன்மை செயலர் / ஆணையர்

03. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் : திடக்கழிவு மேலாண்மைத் துறை(SWM)

04. சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி : ஆம், அளிக்கப்பட்டது

05. தொழில்நுட்ப அனுமதி அளித்த அதிகாரி தலைமை பொறியாளர் (பொது)
செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி : /20-21, நாள் :.

06. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை
விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது: 2020-2021

07. மதிப்பீட்டின் தொகை

| | | | |
|---|---|---|---|
| (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ. | 24717601.60 |
| (ஆ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. | 617233.98 |
| (இ) தரக்கட்டுப்பாடு செலவு | : | ரூ. | 247176.02 |
| (ஈ) உடல் உழைப்போர் நலத்திட்டத் தொகை | : | ரூ. | 247176.02 |
| (உ) சிறு மேற்பார்வை செலவினம் | : | ரூ. | 617940.04 |
| (ஊ) மேலான மேற்பார்வை செலவினம் | : | ரூ. | 2471760.16 |
| (எ) ஜி.எஸ்.டி | : | ரூ. | 2966112.19 |
| | | ரூ. | 3,18,85,000/- |

08. வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா? : ஆம்

09. நிதியின் மூலத்தன்மை : மூலதன நிதி

அ) வரவு செலவு ஒதுக்கீடு :

ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி:

இ) மீதமுள்ள நிதி (அ-ஆ) :

ஈ) இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு
தேவைப்படும் நிதி : ரூ. **3,18,85,000.00/-**

<u>பே.சா.து.ந.க.எண்.பி4/3831/2021</u>

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.3,18,85,000.00/- (ரூபாய் மூன்று கோடியே பதினெட்டு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும்)-க்கான மதிப்பீட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி-1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி78(பி)ன்படி, சிறப்புஅதிகாரி – நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

**முதன்மை செயலர் மற்றும் ஆணையரது *07.10.2021* நாளிட்ட மேற்குறிப்பில் 'Under Singara Chennai 2.0, என தெரிவித்துள்ளார்.**

முதன்மைச்செயலர்/ ஆணையரது *07.10.2021* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"முதன்மைச்செயலர்/ஆணையரது மேற்குறிப்புடன், மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பே.சா.து.ந.க.எண்.பி4/3832/2021**

**தீர்மானஎண்.776/2021** **நாள்:10-10-2021**

**மதிப்பீடு 2020 - 21 - பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை – மண்டலம்-4, வார்டு – 37ல் உள்ள கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் (Reach -2) புதியதாக RCC M30 கான்கிரீட் மூலமாக சாலை அமைக்கும் பணிக்காக 2020-21ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் ரூ.2,39,80,000/-க்கு தயாரிக்கப் பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து சாலைகள் துறை மண்டலம்-4, வார்டு – 37ல் உள்ள கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் புதியதாக RCC M30 கான்கிரீட் மூலமாக சாலை அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

01. பணியின் பெயர் :

| வ. எண். | மண்டலம் / வார்டு எண். | சாலையின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 4/37 | கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் (நீளம்: 300மீ) | கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் புதியதாக RCC M30 கான்கிரீட் மூலமாக சாலை அமைக்கும் பணி | ரூ. 2,39,80,000/- |

02. பரிந்துரை செய்தவரின் விவரம் : முதன்மைசெயலர்/ஆணையர்

03. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் : திடக்கழிவு மேலாண்மைத் துறை(SWM)

04. சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி : ஆம், அளிக்கப்பட்டது

05. தொழில்நுட்ப அனுமதி அளித்த அதிகாரி தலைமை பொறியாளர் (பொது)
செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி: /20-21, நாள்

06. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை
விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது: 2020-2021

07. மதிப்பீட்டின் தொகை

| | | |
|---|---|---|
| (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ. 18590401.20 |
| (ஆ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 463142.48 |
| (இ) தரக்கட்டுப்பாடு செலவு | : | ரூ. 1859040.12 |
| (ஈ) உடல் உழைப்போர் நலத்திட்டத் தொகை | : | ரூ. 1859040.12 |
| (உ) சிறு மேற்பார்வை செலவினம் | : | ரூ. 464760.03 |
| (ஊ) மேலான மேற்பார்வை செலவினம் | : | ரூ. 1859040.12 |
| (எ) ஜி.எஸ்.டி | : | ரூ. 2230848.14 |
| | | ரூ. 2,39,80,000/- |

08. வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா? : ஆம்

| | | | |
|---|---|---|---|
| 09. | நிதியின் மூலத்தன்மை | : | மூலதன நிதி |
| | அ) வரவு செலவு ஒதுக்கீடு | : | |
| | ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | : | |
| | இ) மீதமுள்ள நிதி (அ-ஆ) | : | |
| | ஈ) இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ. 2,39,80,000.00/- |

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.2,39,80,000.00/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தொன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்)-க்கான மதிப்பீட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி-1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி78(பி)ன்படி, சிறப்புஅதிகாரி – நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

**முதன்மை செயலர் மற்றும் ஆணையரது 07.10.2021 நாளிட்ட மேற்குறிப்பில் 'Under Singara Chennai 2.0, என தெரிவித்துள்ளார்.**

முதன்மைச்செயலர்/ ஆணையரது 07.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"முதன்மைச்செயலர்/ஆணையரது மேற்குறிப்புடன், மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**பே.சா.து.ந.க.எண்.பி4/3833/2021**

**தீர்மானஎண்.777/2021** **நாள்:10-10-2021**

**மதிப்பீடு 2020-21-பெருநகர சென்னை மாநகராட்சி-பேருந்து சாலைகள் துறை – மண்டலம்-4, வார்டு – 37ல் உள்ள கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் (Reach-3) புதியதாக RCC M30 கான்கிரீட் மூலமாக சாலை அமைக்கும் பணிக்காக 2020-21ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் ரூ.2,39,80,000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து சாலைகள் துறை மண்டலம்-4, வார்டு – 37ல் உள்ள கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் புதியதாக RCC M30 கான்கிரீட் மூலமாக சாலை அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

01. பணியின் பெயர் :

| வ. எண். | மண்டலம் / வார்டு எண். | சாலையின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 4/37 | கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் (நீளம்: 300மீ) | கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் புதியதாக RCC M30 கான்கிரீட் மூலமாக சாலை அமைக்கும் பணி | ரூ. 2,39,80,000/- |

02. பரிந்துரை செய்தவரின் விவரம் : முதன்மைசெயலர்/ஆணையர்
03. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் : திடக்கழிவு மேலாண்மைத் துறை(SWM)
04. சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி : ஆம், அளிக்கப்பட்டது
05. தொழில்நுட்ப அனுமதி அளித்த அதிகாரி தலைமை பொறியாளர் (பொது)
செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி: /20-21, நாள் :
06. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை
விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது: 2020-2021
07. மதிப்பீட்டின் தொகை
(அ) பணி செலவினம் மட்டும் : ரூ. 18590401.20
(ஆ) மற்றைய எதிர்பாரா செலவு : ரூ. 463142.48
(இ) தரக்கட்டுப்பாடு செலவு : ரூ. 1859040.12
(ஈ) உடல் உழைப்போர் நலத்திட்டத் தொகை: ரூ. 1859040.12
(உ) சிறு மேற்பார்வை செலவினம் : ரூ. 464760.03
(ஊ) மேலான மேற்பார்வை செலவினம் : ரூ. 1859040.12
(எ) ஜி.எஸ்.டி : ரூ. 2230848.14

-----------------------------

ரூ. 2,39,80,000/-

------------------------------

08. வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா? : ஆம்
09. நிதியின் மூலத்தன்மை : மூலதன நிதி
அ) வரவு செலவு ஒதுக்கீடு :
ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி :
இ) மீதமுள்ள நிதி (அ-ஆ) :
ஈ) இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு
தேவைப்படும் நிதி : ரூ. 2,39,80,000.00/-

**பே.சா.து.ந.க.எண்.பி4/3833/2021**

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.2,39,80,000.00/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தொன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்)-க்கான மதிப்பீட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி-1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி78(பி)ன்படி, சிறப்புஅதிகாரி – நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

**முதன்மை செயலர் மற்றும் ஆணையரது *07.10.2021* நாளிட்ட மேற்குறிப்பில் 'Under Singara Chennai 2.0, என தெரிவித்துள்ளார்.**

முதன்மைச்செயலர்/ ஆணையரது *07.10.2021* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"முதன்மைச்செயலர்/ஆணையரது மேற்குறிப்புடன், மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது".**

*** * * * * ***

பே.சா.து.ந.க.எண்.பி4/3834/2021

**தீர்மானஎண்.778/2021** **நாள்:10-10-2021**

**மதிப்பீடு 2020 - 21 - பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை – மண்டலம்-4, வார்டு – 37ல் உள்ள கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் (Reach -4) புதியதாக RCC M30 கான்கிரீட் மூலமாக சாலை அமைக்கும் பணிக்காக 2020-21ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் ரூ.2,39,80,000/-க்கு தயாரிக்கப் பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை பேருந்து சாலைகள் துறை மாநகராட்சி மண்டலம்-4, வார்டு – 37ல் உள்ள கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் புதியதாக RCC M30 கான்கிரீட் மூலமாக சாலை அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

01. பணியின் பெயர் :

| வ. எண். | மண்டலம் / வார்டு எண். | சாலையின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 4/37 | கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் (நீளம்: 300மீ) | கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் புதியதாக RCC M30 கான்கிரீட் மூலமாக சாலை அமைக்கும் பணி | ரூ. 2,39,80,000/- |

02. பரிந்துரை செய்தவரின் விவரம் : முதன்மைசெயலர்/ஆணையர்

03. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம்: திடக்கழிவு மேலாண்மைத் துறை(SWM)

04. சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி : ஆம், அளிக்கப்பட்டது

05. தொழில்நுட்ப அனுமதி அளித்த அதிகாரி தலைமை பொறியாளர் (பொது)
செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி: /20-21, நாள்

06. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை
விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது: 2020-2021

07. மதிப்பீட்டின் தொகை

| | | |
|---|---|---|
| (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ. 18590401.20 |
| (ஆ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 463142.48 |
| (இ) தரக்கட்டுப்பாடு செலவு | : | ரூ. 1859040.12 |
| (ஈ) உடல் உழைப்போர் நலத்திட்டத் தொகை | : | ரூ. 1859040.12 |
| (உ) சிறு மேற்பார்வை செலவினம் | : | ரூ. 464760.03 |
| (ஊ) மேலான மேற்பார்வை செலவினம் | : | ரூ. 1859040.12 |
| (எ) ஜி.எஸ்.டி | : | ரூ. 2230848.14 |
| | | ரூ. 2,39,80,000/- |

08. வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா? : ஆம்

| | | | |
|---|---|---|---|
| 09. | நிதியின் மூலத்தன்மை | : | மூலதன நிதி |
| | அ) வரவு செலவு ஒதுக்கீடு | : | |
| | ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | : | |
| | இ) மீதமுள்ள நிதி (அ-ஆ) | : | |
| | ஈ) இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ. 2,39,80,000.00/- |

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.2,39,80,000.00/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தொன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்)-க்கான மதிப்பீட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி-1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி78(பி)ன்படி, சிறப்புஅதிகாரி – நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

**முதன்மை செயலர் மற்றும் ஆணையரது 07.10.2021 நாளிட்ட மேற்குறிப்பில் 'Under Singara Chennai 2.0, என தெரிவித்துள்ளார்.**

முதன்மைச்செயலர்/ ஆணையரது 07.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"முதன்மைச்செயலர்/ஆணையரது மேற்குறிப்புடன், மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.அ.9.ந.க.எண்.இ1/8277/2021**

**தீர்மானஎண்.779/2021** **நாள்:10-10-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9 - வார்டு - 110ல் நுங்கம்பாக்கம் காம்தார் நகரில் பழுதடைந்த நிலையில் உள்ள வீடற்றோர் ஆதரவற்றோர் மாற்று திறனாளி பெண்கள் சிறப்பு காப்பகத்தினை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, வார்டு- நுங்கம்பாக்கம் காம்தார் நகரில் உள்ள வீடற்றோர் ஆதரவற்றோர் மாற்று திறனாளி பெண்களுக்கு சிறப்பு காப்பகத்தினை வேறொரு இடத்திற்கு மாற்றம் செய்து பழுதடைந்த நிலையில் உள்ள காப்பகத்தினை இடித்து அகற்றி, அவ்விடத்தில் தேவைக்கேற்றவாறு வேறுபயன்பாட்டிற்கு உபயோகப்படுத்திக்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிட துறைக்கு வழங்க சிறப்பு அதிகாரி- (நிலைக்குழு பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மை செயலர் மற்றும் ஆணையரது 07.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

அதன் விவரம்.

| வ. எண். | வார்டு எண். | இடம் | கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | கட்டிடத்தின் பரப்பளவு | இடத்தின் பரப்பளவு | தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 110 | காம்தார் நகரில் உள்ள வீடற்றோர், ஆதரவற்றோர் காப்பகம் | 1999-2000 | 310 ச. மீ | 465 ச.மீ. | ரூ. 14,20,053/- | பழுதடைந்த நிலையில் உள்ளது. | பெருநகர சென்னை மாநகராட்சி , கட்டடத்துறை மூலம் புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**“பழுதடைந்த காப்பகத்தினை இடித்து அகற்ற, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*** * * * * ***

**பொ.து.ந.க.எண்.இ6/20198/2021 &**

**தி.க.மே.து.ந.க.எண்.அ5/1675/2020**

**தீர்மானஎண். 780/2021** **நாள்:11-10-2021**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை - திடக்கழிவு மேலாண்மை துறையில் 2020-2021ஆம் பட்டியலாண்டில் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி 2020 - 2021 ஆம் பட்டியல் ஆண்டிற்கான துப்புரவு ஆய்வாளர் காலிப்பணியிடங்களை 7வது ஊதியக்குழு பரிந்துரையின்படி, ரூ.18,500 - 58600 என்ற ஊதிய விகிதம் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் நிரப்புவதற்கான பட்டியல் 01.04.2020 என்ற மைய நாளிட்டு (Crucial Date) தயாரிக்கப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள் 2009ல் துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வுக்கு நியமனமுறை மற்றும் கல்வித் தகுதி கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான நியமன முறை**

| பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் | ஊதிய விகிதம் மற்றும் நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| துப்புரவு ஆய்வாளர் | 1) கீழ்கண்ட பதவிகளிலிருந்து பதவி உயர்வு மூலம்<br><br>i)மூன்றாண்டுகள் பணி முடிந்த துப்புரவு மேஸ்திரி/ பதிவுரு எழுத்தர்<br><br>2) நேரடிநியமனம் | குறைந்த பட்ச பொது கல்வி தகுதி<br><br>பட்டப்படிப்பு தேர்ச்சி (10th – 12th – UG) | 7வது ஊதியக்குழு பரிந்துரையின்படி, ரூ.18,500 – 58,600<br><br>நிர்ணய நாள்ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1ம் நாள் | 1)பட்டியல் ஆண்டில் ஏற்பட்டுள்ள/ஏற்படவுள்ள காலிப் பணியிடங்களை 50% பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு. மீதமுள்ள 50% காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட வேண்டும்.<br><br>2)பட்டியலாண்டில் நிரப்பப்படாமல் நிலுவையில் உள்ள காலிப்பணியிடங்களை அடுத்த ஆண்டிற்கான உரிய ஒதுக்கீட்டிற்கு முன் கொணரப்பட வேண்டும் |

திடக்கழிவு மேலாண்மை துறையின் 26.08.2020 நாளிட்ட சுற்றறிக்கையில் 2020 - 2021 ம் பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள/ஏற்படவுள்ள துப்புரவு ஆய்வாளர் காலிப்பணியிடங்களை நிரப்பிடும் பொருட்டு, தகுதி வாய்ந்த துப்புரவு மேஸ்திரிகள் மற்றும் பதிவுரு எழுத்தர்கள் விவரங்களை அனுப்பி வைக்குமாறு அனைத்து துறைகள் மற்றும் மண்டலங்களை 26.08.2020 நாளிட்ட சுற்றறிக்கை மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது, அவ்வாறு கேட்டுக் கொள்ளப்பட்டதில் 6 துப்புரவு மேஸ்திரிகள் மற்றும் 4 பதிவுரு எழுத்தர்களின் விவரங்கள் பெறப்பட்டு பணிமூப்பு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

**துப்புரவு ஆய்வாளர்கள் பதவிக்கான காலிப்பணியிட விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | **Total cadre strength** | **309 Nos** |
| | (i) Temporary | - NIL – |
| | (ii) **Permanent** | **309 Nos** |
| 2. | Number of vacancies of retirements (For 12 months as in para 14 of G.O.Ms.No.603, Personnel and Administrative Reforms (Per.M) Department, Dated 12th June 1985) (or on the crucial date prescribed in the rules) | -- |
| 2(1) | Vacancies carried over from 2019-2020 | **95 Nos** |

<table>
<tr><td>3.</td><td>5 percent leave reserve vacancies with reference to the working strength (Not applicable for direct recruitment)</td><td>- NIL –</td></tr>
<tr><td>4.</td><td>Number of likely promotions<br>Conservancy Inspector to Conservancy Supervisor<br>01. C.Mani, Conservancy Inspector, Zone -5.<br>02. M.Ebinesan , Conservancy Inspector, Zone- 2.</td><td>2 Nos –</td></tr>
<tr><td>5.</td><td>Number of new posts likely to be sanctioned during the panel period and the number of posts sanctioned earlier but not included in the previous year estimate</td><td>- NIL –</td></tr>
<tr><td></td><td>Vacancies</td><td>2 Nos</td></tr>
<tr><td>6.</td><td>Total Vacancies = 2 Nos (Col.4+5)<br><br><u>As Per Junior Asst Ratio 1:1</u><br><br>Promotion = 1Nos<br>:<br>Direct Recruitment = 1Nos<br><br>Promotion Vacancies</td><td>1No</td></tr>
<tr><td>7.</td><td>Number of vacancies to be provided for unexpected contingencies on a staggered scale as indicated in G.O.Ms.No.103, Personnel and Administrative Reforms (S) Department, Dated 9th October 1994.<br><br>
<table>
<tr><td>When the total vacancies arrived at with reference General rule 4 are between</td><td>Provision for unexpected contingencies as a percentage of total vacancies</td></tr>
<tr><td>1 to 10</td><td>40%</td></tr>
<tr><td>11 to 20</td><td>30%</td></tr>
<tr><td>21 to 40</td><td>20%</td></tr>
<tr><td>41 to 100</td><td>15%</td></tr>
<tr><td>100 and above</td><td>10%</td></tr>
</table>
<br>(Col.No.2(1)+6) Promotion Vacancies 96 x 15%= (14.4) 14Nos</td><td>14 Nos</td></tr>
<tr><td></td><td>Deduct</td><td></td></tr>
<tr><td>8.</td><td>Number of posts disbanded during the recruitment year</td><td>- NIL –</td></tr>
<tr><td>9.</td><td>Number of vacancies apportioned for direct recruitment<br><br>2015-2016 – 127 Nos<br>2016-2017 – 01 Nos<br>2017-2018 – 09 Nos<br>2018-2019 – 03 Nos<br>2019-2020 – 02 Nos<br>-------<br>Total 142Nos<br>-------<br>2020-2021 – 01Nos<br>-------<br>Total 143Nos<br>-------</td><td></td></tr>
<tr><td></td><td>Total (95+1+14=110)</td><td>110 Nos</td></tr>
<tr><td>10.</td><td>Number of persons who have been promoted against leave vacancies and subsequently reverted to the lower cadre from the approved list already drawn-up.</td><td>- NIL –</td></tr>
<tr><td>11.</td><td>Number of persons who have been deputed to other posts for a specified period and subsequently revered to the lower cadre for want of vacancy.</td><td>- NIL –</td></tr>
</table>

**பொ.து.ந.க.எண்.இ6/20198/2021 &**
**தி.க.மே.து.ந.க.எண்.அ5/1675/2020**

2020-2021 ஆம் பட்டியலாண்டில் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான (Estimate Vacancies) காலிப் பணியிடங்களின் மதிப்பீடு 110 ஆகும். ஆகவே பணி மூப்பு பட்டியலில் இடம் பெற்றுள்ள 6 துப்புரவு மேஸ்திரிகள் மற்றும் 4 பதிவுரு எழுத்தர்களின் பணி பதிவேடுகளை ஆய்வு செய்ததில் கீழ்கண்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணி மூப்பு பட்டியலில் வ.எண். | துப்புரவு ஆய்வாளர்களின் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் மண்டலம் | குற்றச்சாட்டின்தன்மை | | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | 9(1) | 9(2) | |
| 01 | 01 | V.ராஜரத்தினம் துப்புரவு மேஸ்திரி மண்டலம் 3 | | தனியரின் மீது 9(2)ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வடக்கு வட்டார துணைஆணையர் அவர்களின் செயல் முறை ஆணையின் படி தண்டனையாக இரண்டாண்டுகள் திரண்ட பயனுடன் ஊதியம் நிறுத்தம் செய்யப்பட்டது ஆணை நாள் 02.07.2019 | தண்டனை காலம் நடப்பில் உள்ளதால் தனியருக்கு பதவி உயர்வு வழங்க இயலாது. |
| 02 | 02 | G.K.பத்மாவதி துப்புரவு மேஸ்திரி மண்டலம் 8 | | | தனியர் தாய்மொழி தெலுங்கில் கல்வி பயின்றுள்ளார். இரண்டாம் மொழி தமிழில் தேர்வில் தேர்ச்சி பெறாததால் தனியருக்கு பதவி உயர்வு வழங்க இயலாது. |
| 3. | 06 | R.ஜெயக்குமார் துப்புரவு மேஸ்திரி மண்டலம் 9 | தனியரின் மீது 9(1)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் செயல்முறை ஆணையின்படி தண்டனையாக மூன்று மாதம் திரண்ட பயனின்றி (Without Cumulative Effects) ஊதியம் நிறுத்தம் செய்யப்பட்டது. ஆணை நாள் 13.11.2020. | | தண்டனை காலம் நடப்பில் உள்ளதால் தனியருக்கு பதவி உயர்வு வழங்க இயலாது |

**பொ.து.ந.க.எண்.இ6/20198/2021 &**

**தி.க.மே.து.ந.க.எண்.அ5/1675/2020**

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் 01.04.2020 யை மைய நாளாகக் கொண்ட 2020-2021 ஆம் பட்டியலாண்டில் துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வுக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு அமைந்தது.

**01.04.2020ஐ மைய நாளாகக் கொண்ட 2020-2021ம் ஆண்டு துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல்**

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | தற்போதுள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள் | கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 1. | S.புருசோத்தமன்<br>பதிவுரு எழுத்தர்<br>மத்திய கணக்கு குழுமம் | 10.10.2012 | 10ஆம்<br>வகுப்பு தேர்ச்சி |
| 2. | C. மாலயாத்திரி<br>பதிவுரு எழுத்தர்<br>பொதுத்துறை | 11.05.2015 | 10ஆம்<br>வகுப்பு தேர்ச்சி |
| 3. | G ராமகிருஷ்ணய்யா<br>துப்புரவு மேஸ்திரி<br>மண்டலம் -7 | 24.07.2015 | 10ஆம்<br>வகுப்புதேர்ச்சி |
| 4 | V. மனோகரன்<br>துப்புரவு மேஸ்திரி<br>மண்டலம் -14 | 27.07.2015 | 10ஆம்<br>வகுப்புதேர்ச்சி |
| 5. | T.R. வெற்றிவேல்<br>துப்புரவு மேஸ்திரி<br>மண்டலம் -7 | 31.07.2015 | 10ஆம்<br>வகுப்புதேர்ச்சி |
| 6. | R.குமார்<br>பதிவுரு எழுத்தர்<br>மண்டலம் -12 | 09.02.2017 | 10ஆம்<br>வகுப்புதேர்ச்சி |
| 7. | M.ஜானகிராமன்<br>பதிவுருஎழுத்தர்<br>மழைநீர் வடிகால் துறை | 17.02.2017 | 10ஆம்<br>வகுப்புதேர்ச்சி |

திடக்கழிவு மேலாண்மைத்துறையின் 23.06.2021 நாளிட்ட சுற்றறிக்கை மூலம் மேற்படி தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து வட்டார துணை ஆணையர்கள்/மண்டல அலுவலர்கள் மற்றும் துறை தலைவர்கள் தங்களின் கீழ் பணிபுரியும் அனைத்து பதிவுரு எழுத்தர்கள் மற்றும் துப்புரவு மேஸ்திரிகளுக்கு சுற்றுக்கு விட்டு, இத்தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து பெறப்படும் ஆட்சேபணைக் கருத்துக்களை உரிய ஆவணங்களுடன் 09.07.2021 தேதிக்குள் திடக்கழிவு மேலாண்மை துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது, அவ்வாறு கேட்டுக் கொள்ளப்பட்டதனை தொடர்ந்து மண்டலம் -3 மற்றும் 9 ஆகியவற்றிலிருந்து கீழ்க்கண்ட ஆட்சேபணைகள் பெறப்பட்டது. அவ்வாறு பெறப்பட்ட ஆட்சேபணைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விவரங்கள்கீழ்கண்டவாறுஅளிக்கப்படுகிறது.

| வ. எண் | துப்புரவுஆய்வாளர் பெயர்/மண்டலம் | ஆட்சேபனை | எடுக்கப்பட்டநடவடிக்கையின் விவரம் |
|---|---|---|---|
| 1. | திரு.V.ராஜரத்தினம்<br>துப்புரவு மேஸ்திரி<br>மண்டலம் 3 | தனியர் தனக்கு 9(2)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இரண்டு ஆண்டுகள் திரண்ட பயனுடன் ஊதியம் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் தண்டனை காலம் நிறைவடைந்ததாகவும் 2020-2021ம் துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் தனது பெயரை சேர்க்குமாறு கடிதம் அளித்துள்ளார். | தனியருக்கு கடந்த 02.07.2019 தேதியில் ஒழுங்கு நடவடிக்கைக்கான இறுதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. 01.04.2020 தேதியிட்ட மைய நாளில் தண்டனை காலம் நடப்பில் உள்ளதால் தனியருக்கு பதவி உயர்வு வழங்க இயலாது. |

**பொ.து.ந.க.எண்.இ6/20198/2021 &**

**தி.க.மே.து.ந.க.எண்.அ5/1675/2020**

| | | | |
|---|---|---|---|
| 2. | திரு. ஜெயக்குமார் துப்புரவு மேஸ்திரி மண்டலம் 9 | தனியர் தனக்கு 9(1)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் மூன்று மாதம் திரண்ட பயனுடன் ஊதியம் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் தண்டனை காலம் நிறைவடைந்ததாகவும் 2020-2021ம் துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் தனது பெயரை சேர்க்குமாறு கடிதம் அளித்துள்ளார் | தனியருக்கு கடந்த 02.07.2019 தேதியில் ஒழுங்கு நடவடிக்கைக்கான இறுதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. 01.04.2020 தேதியிட்ட மைய நாளில் தண்டனை காலம் நடப்பில் உள்ளதால் அரசாணையின்படி தனியருக்கு பதவி உயர்வு வழங்க இயலாது . *(Govt. Lr. No. 13400/ s / 2007 - 6, P&AR Dept., dated:11.09.2009)* |

ஆகவே மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் *2020-2021* ஆம் ஆண்டின் *01.04.2020*ஐ மைய நாளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான தகுதி வாய்ந்த *7* நபர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு அமைகிறது.

**01.04.2020ஐ மைய நாளாகக் கொண்ட 2020-2021ம் ஆண்டு துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான இறுதி தெரிவுப் பட்டியல்**

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | தற்போதுள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள் | கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 1. | S.புருசோத்தமன்<br>பதிவுரு எழுத்தர்<br>மத்திய கணக்கு குழுமம் | 10.10.2012 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 2. | C. மாலயாத்திரி<br>பதிவுரு எழுத்தர்<br>பொதுத்துறை | 11.05.2015 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 3. | G ராமகிருஷ்ணய்யா<br>துப்புரவு மேஸ்திரி<br>மண்டலம் -7 | 24.07.2015 | 10ஆம் வகுப்புதேர்ச்சி |
| 4 | V. மனோகரன்<br>துப்புரவு மேஸ்திரி<br>மண்டலம் -14 | 27.07.2015 | 10ஆம் வகுப்புதேர்ச்சி |
| 5. | T.R. வெற்றிவேல்<br>துப்புரவு மேஸ்திரி<br>மண்டலம் -7 | 31.07.2015 | 10ஆம் வகுப்புதேர்ச்சி |
| 6. | R.குமார்<br>பதிவுரு எழுத்தர்<br>மண்டலம் -12 | 09.02.2017 | 10ஆம் வகுப்புதேர்ச்சி |
| 7. | M.ஜானகிராமன்<br>பதிவுருஎழுத்தர்<br>மழைநீர் வடிகால் துறை | 17.02.2017 | 10ஆம் வகுப்புதேர்ச்சி |

எனவே,

அ) பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களுக்கான திருத்தப்பட்ட சார்நிலை துணை விதிகள் 2009ன் படி 01.04.2020ஐ மைய நாளாகக் கொண்ட 2020-*2021* ஆண்டிற்கான துப்புரவு ஆய்வாளர் பதவிக்கு துப்புரவு மேஸ்திரி மற்றும் பதிவுரு எழுத்தர்களின் மூப்பு நிலை வரிசையின் அடிப்படையில் தகுதி பெற்றுள்ள 7 நபர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

<u>பொ.து.ந.க.எண்.இ6/20198/2021 &</u>

<u>தி.க.மே.து.ந.க.எண்.அ5/1675/2020</u>

ஆ) இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள 7 நபர்களுக்கு பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களில் 7வது ஊதிய குழுவின் பரிந்துரையின்படி ரூ.18,500-58,600 என்ற காலமுறை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய, முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 07.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வு தெரிவுப்பட்டியல், அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*** * * * * ***

**<u>பொ.து.ந.க.எண்.ஈ2/18734/2021</u>**

**தீர்மானஎண். 781/2021** **நாள்:11-10-2021**

**<u>பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டல சுகாதார அலுவலர் பதவியில் 15.05.2020 ஐ மைய நாளாகக் கொண்டு 2020 - 2021 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியலை இன்மைப்பட்டியல் ஆக வெளியிடவும் - 15.05.2021 ஐ மைய நாளாகக் கொண்டு 2021 - 2022 ஆம் ஆண்டிற்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கவும் மற்றும் பதவி உயர்வு வழங்கவும் அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியில், பொது சுகாதாரத்துறையில் வகுப்பு-2ன் கீழ் மண்டல சுகாதார அலுவலர் பதவிக்கு 15.05.2020 மற்றும் 15.05.2021-ஐ மைய நாளாகக் கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | மண்டல சுகாதார அலுவலர்,<br>வகுப்பு-2 | | |
| 2. | மையநாள் | 15.05.2020 (ம) 15.05.2021 | | |
| 3. | ஊதிய விகிதம் | பழைய ஊதிய விகிதம் ரூ.15600-39100 + தர ஊதியம் 5700 (புதிய ஊதிய விகிதம் ரூ.56900-180500, level-23) | | |
| 4. | ஊட்டப்பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | <u>**மருத்துவ அலுவலர்**</u><br>By promotion from the Categories of Medical Officer (Allopathy) or Medical Officer (Tuberculosis Clinic) **or **Medical Officer in Family Welfare Department.** | | |
| 5. | காலிப்பணியிட விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் | - | 17 |
| | | மொத்தம் | - | 17 |
| | | அ) தற்காலிக பணியிடம் | - | - |
| | | ஆ) நிரந்தர பணியிடம் | - | 17 |
| | | 2. தற்போது பணியில் உள்ளவர்கள் | - | 09 |
| | | 3. மைய நாளுக்கு பின்பு/முன்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் | - | 08 |
| | | 4. அரசாணை எண்.103, பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்த (எஸ்) துணை, நாள்.09.10.2014ன்படி, எதிர்பாராமல் ஏற்படவுள்ள காலிப்பணியிடம் | - | 03 |
| | | 5. மொத்த காலிப்பணியிடம் | - | 11 |
| 5. | வளர் நிலை பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | <u>**மருத்துவ அலுவலர்**</u><br>*(i) MBBS Degree with Diploma in Public Health*<br>*(ii) A pass in Account Test for Executive Officers.* | | |
| 6. | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா? இல்லையெனில் காரணம் | இல்லை<br>2020 - 2021 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் இன்மைப் பட்டியல் ஆக வெளியிடப்பட உள்ளது. | | |

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் பணி விதி, 1969-ன்படி மண்டல சுகாதார அலுவலர் பதவிக்கான நியமன முறை மற்றும் தகுதிகள் பின்வருமாறு:

**பொ.து.ந.க.எண்.ஈ2/18734/2021**

| Name of the Post /Scale of Pay | Method of Appointment | Qualification |
|---|---|---|
| **Zonal Health Officer** | (i) By direct recruitment or<br><br>**(ii) By promotion from the Categories of Medical Officer (Allopathy) or Medical Officer (Tuberculosis Clinic) or **Medical officer in Family Welfare Department.**<br><br>(G.O.Ms.No.129, Municipal Administration and Water Supply (MC-3) Department, dated:15.10.2019)<br>(iii)By appointment from the category of Health Officer in Tamilnadu Public Health Service or from State service on deputation (G.O.Ms. No.91, Dt.28.05.1998) | (i) MBBS Degree with Diploma in Public Health<br>(ii) A pass in Account Test for Executive Officers. |

மாநகர நல அலுவலர் அவர்களின் 22.06.2021 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, மண்டல சுகாதார அலுவலர் பதவி உயர்வுக்கு தகுதியான நபர்களின் விவரங்கள் கோரப்பட்டு, மாநகர நல அலுவலர் (பொ) அவர்களின் 19.07.2021 நாளிட்ட கடிதம் மூலம் டாக்டர். யு. சுதா, மருத்துவ அலுவலர், மண்டலம் -11 (மண்டல சுகாதார அலுவலர் (பொ), மண்டலம் -12) மற்றும் டாக்டர். இளஞ்செழியன், மருத்துவ அலுவலர் (மண்டல சுகாதார அலுவலர் (பொ)), மண்டலம் – 1 அவர்களின் பரிந்துரைப்பட்டி, பதிவுருத்தாள் இணைத்து அனுப்பப்படுகிறது எனத், தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதாரத்துறையில் இருந்து பெறப்பட்டுள்ள மண்டல சுகாதார அலுவலர் பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்த ஊட்டப்பதவியில் உள்ள மருத்துவ அலுவலர்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் மண்டலம் (ம) துறை | தற்போதுள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள். | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | டாக்டர். யு. சுதா,<br>மருத்துவ அலுவலர்,<br>மண்டலம் -11<br>பொது சுகாதாரத்துறை | 02.07.2010<br>பி.ப | முழுத் தகுதி பெற்று விதிகளின்படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதிபெற்றுள்ளார். |
| 2. | டாக்டர்.என்.இளஞ்செழியன்,<br>மருத்துவ அலுவலர்,<br>மண்டலம்-1<br>பொது சுகாதாரத்துறை | 03.12.2007 | தனியர் மண்டல சுகாதார அலுவலர் பதவி உயர்வுக்கான கல்வித் தகுதி (DPH Course) பெறவில்லை. மேலும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10 (a) மற்றும் 10 (b) ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு 2 கோப்புகள் நிலுவையில் உள்ளதால், தெரிவுப் பட்டியலில் சேர்க்க இயலாது. |

**பொ.து.ந.க.எண்.ஈ2/18734/2021**

மேலும், மண்டலம் -11 மற்றும் மண்டலம் – 1ஐ தவிர மற்ற மண்டலங்களில் இருந்து "இன்மை அறிக்கை" பெறப்பட்டுள்ளது.

முதன்மைச் செயலர்/ ஆணையர் அவர்களின் 14.07.2021 ஆய்வுக்கூட்ட சுருக்கத்தின் அடிப்படையிலும், 2020-2021 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியலுக்கு தகுதிவாய்ந்த நபர்கள் எவரும் இல்லாத காரணத்தினாலும் 15.05.2020 ஐ மைய நாளுக்கான தெரிவுப்பட்டியலை "இன்மை பட்டியல்" ஆக வெளியிடப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மண்டல சுகாதார அலுவலர் பதவி வகுப்பு-2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கி பணிநியமனம் செய்யும் அதிகார பங்களிப்பு பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே,

1) 2020-2021 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியலுக்கு தகுதியான நபர்கள் இல்லாததால் "இன்மைப் பட்டியல்" வெளியிடவும்,
2) 15.05.2021–னை மைய நாளாகக் கொண்டு 2021-2022 ஆம் ஆண்டிற்கான மண்டல சுகாதார அலுவலர் பதவி உயர்வுக்கு முழுத் தகுதியுடைய கீழ்காண் மருத்துவ அலுவலரை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்.

| **வ. எண்.** | **பெயர்** | **மருத்துவ அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்.** |
|---|---|---|
| 1. | டாக்டர். யு. சுதா,<br>மருத்துவ அலுவலர். | 02.07.2010 பி.ப |

3) மேற்படி தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றுள்ள 1 மருத்துவ அலுவலருக்கு மண்டல சுகாதார அலுவலராக பதவி உயர்வு வழங்கவும், தனியருக்கு ரூ.56900/- - ரூ.180500/- என்ற காலமுறை ஊதியத்தில், காலிப்பணியிடத்தில் பணியமர்வு செய்து ஆணை வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய, முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 07.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"மண்டல சுகாதார அலுவலர் பதவிஇன்மை பட்டியல் மற்றும் தெரிவுப்பட்டியல், வ.எண். 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**ம.அ.8. ந.க.எண்.எச்1/1822/2021**

**தீர்மான எண். 782/2021** **நாள்:11-10-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-8, பகுதி-21 முதல் 23 வரையுள்ள கோட்டம்-94 முதல் 108 வரை - தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட மலேரியா பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2021ல் முடிவடைகிறது - 01.10.2021 முதல் 30.09.2022 வரை ஒருவருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட 139 நபர்கள் மற்றும் கூடுதலாக பணியமர்த்தப்பட்ட 10 நபர்கள் ஆக மொத்தம் 149 மலேரியா பணியாளர்ளை பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-8 (அண்ணா நகர்) பகுதி 21, 22 மற்றும் 23 (கோட்டம் 94 முதல் 108 வரை) 15 கோட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் சுமார் 81,027 வீடுகள் உள்ளன. இவைகளில் கொசுப்புழுக்கள் வளரிடங்களை கண்டறிந்து அழிக்கும் பணிகளான கிணறு, கீழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் மருந்திடும் (ALO) பணி, மழைநீர் கால்வாய், நீர்வழி பிரிவுகளில் வளரும் கொசுப்புழுவை அழிக்கும் வகையில் மருந்து தெளிக்கும் (AMO) பணி மற்றும் புகை மருந்து அடிக்கும் (Fogging) பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோட்டம்-94 முதல் 108 வரை பொது சுகாதாரத்துறை மலேரியா பிரிவில் மொத்தம் 94 நிரந்தர மலேரியா பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் அல்லாமல் 139 தற்காலிக பணியாளர்கள் மற்றும் சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.720/2020ன்படி கூடுதலாக 10 பணியாளர்களை பணியமர்த்த ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது. எனவே மொத்தம் 149 பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தி நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது 30.09.2021 ல் முடிவடைகிறது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14.07.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தினக்கூலி ரூ.391/-லிருந்து ரூ.410/- ஆக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே,

அ) மண்டலம்-8 பகுதி-21, 22 மற்றும் 23 கோட்டம்-94 முதல் 108 வரை உள்ள பகுதிகளுக்கு 139 பணியாளர்கள் மற்றும் கூடுதலாக பணியமர்த்தப்பட்ட 10 பணியாளர்கள் சேர்த்து மொத்தம் 149 தற்காலிக மலேரியா பணியாளர்களை 01.10.2021 முதல் 31.09.2022 வரை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தவும் மாவட்ட ஆட்சியரின் தினக்கூலியின் அடிப்படையில் நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம் (149 நபர்கள்Xரூ.410 X365 நாட்கள்) ரூ.2,22,97,850/- (ரூபாய் இரண்டு கோடியே இருபத்து இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,

ஆ) மேற்கண்ட 149 பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தி கொள்ளவும்,

<u>ம.அ.8. ந.க.எண்.எச்1/1822/2021</u>

இ) சுகாதார துறையின் தலைப்பு குறியீட்டு எண்.30-32-02 கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 என்ற தலைப்பில் செலவினங்களை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 07.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**Z.O.XV.C.No.B1/00305/2021**

**Resolution No.783/2021** **Date:11-10-2021**

**Greater Chennai Corporation – Zone 15 – St+art India Foundation – Developing an Art District in Chennai - Art Intervention at 2nd Edition of Kannagi Art District & Rooftop Project - 2021 - Council resolution Obtained - To change the budget head from Capital Head to Revenue Head – For orders.**

